# போகும் பொழுதும்

1

அன்று காலையிலிருந்தே வாசுதேவனின் மனதில் ஒரு குழப்பம்; சொல்லத் தெரியாத வேதனை. பித்தம் பிடித்தாற்போல இருந்தான். நினைத்த இடத்தில் "தொப்"பென்று உட்கார்ந்தான். ஆனால் மனது அலட்டிக் கொண்டுதான் இருந்தது. உள்ளக் கொதிப்புக்கு ஈடு செய்வதுபோல, நிம்மதியை நாடுவது போல, உலாவினான். அப்பொழுதும் அதே வேதனைதான். கொதிக்கக் கொதிக்கச் சுண்டும் நீரைப்போல, அவனுடைய முகம் சுண்டிக்கொண்டு வந்தது. உடலும் மனமும் நிலை காண முடியாமல் - நீர்க்கதிபோல கொந்தளித்தது.

உள்ளே அன்னை படுத்த படுக்கையாய்க் கிடக்கிறாள், ஊசலாடிக் கொண்டிருந்த அவளுடைய உயிரைப்போலவே, வாசுவின் மனதும் ஊசலாடிக்கொண்டு கிடந்தது. அறைக்குள் எட்டிப் பார்த்த வண்ணம் தவித்தான் வாசு. அம்மாவின் அருகேயே உட்கார்ந்திருக்க மட்டும் துணிவு வரவில்லை. அம்மாவை - அருமை அம்மாவை - அந்த நிலையில் பார்த்துக்கொண்டே இருக்கக் கூசியது கண், கூச்சங் கொண்டது மனசு. உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கும் அம்மாவை எண்ணி எண்ணி உள்ளம் நைந்தான், வாசு.

உண்மையை ஆராயப் போனால், அம்மாவின் உயிருக்காக வாசுதான் மன்றாடிக் கொண்டிருந்தான் என்று சொல்ல வேண்டும். காவேரியம்மாளுக்கு உயிர்மேல் ஆசையில்லை. எழுபத்திரண்டு வயதும் அமைதியாகவே கடத்திவிட்டாள். வயசு காலத்தில் சுகமாகப் போய்விடணும் என்பது அவள் அவா. இன்னும் பிழைத்து இருந்தால் நடை தளர, தேகமொடுங்க, நாவு குழர, கண்கள் மங்க, என்னென்ன அவஸ்தைகள்பட வேண்டியிருக்குமோ, என்னென்ன கஷ்டங்களைப் பிறருக்குக் கொடுக்கும்படி நேருமோ என்பது அவள் அச்சம். இப்படியே நல்லபடியாய்ப் போய்ச் சேர்ந்துவிட்டால் தனக்கும் சுகம், பிறர்க்கும் கஷ்டமில்லை என்றே எண்ணினாள் காவேரியம்மாள்.

ஆனால் வாசு அம்மாவின் வைராக்கியத்தை ஒவ்வவில்லை. அம்மாதான் அவனுக்குக் கண்கண்ட தெய்வம். அப்பா இளம் வயதிலேயே காலமானார். அன்றிலிருந்து அம்மாதான் அவனை வளர்த்துப் பெரியவனாக்கியிருக்கிறாள். வாசுவுக்குப் பணம் உண்டு, உற்றார் உறவினர் உண்டு. அக்காள் தங்கைகளுமுண்டு. அழகியும் விவேகியுமான மனைவியும் உண்டு. ஆனால், அம்மாதான் சகலமுமாக விளங்கினாள் அவனுக்கு.

அன்பற்ற மக்களிடம் கூட வாஞ்சை வைத்துப் பேணுவது தாயுள்ளம். அப்படியிருக்கக் காவேரியம்மாள் அன்புமிக்கத் தன் தனயனிடம், ஒரே மகனிடம், வைத்திருந்த அன்புக்கு ஒப்புக்கூற முடியுமா? தாயுள்ளத்தைத்தான் ஒப்பிடலாம். ஆனால் காவேரியம்மாள் பிள்ளைக்கு மட்டும் தானா நல்லவள்_? இல்லை; நாட்டுப் பெண்ணுக்கும் இதமானவள். உண்மையான நலனைப் பிள்ளைக்காக நாடினாள். அதனால் எல்லோருக்கும் இனிமையானவள், ஊருக்கே நல்லவள்.

இத்தகைய அன்னையை இழப்பதா என்ற எண்ணம் வாசுவை உலுக்கியது. வீட்டிலே - காலை வேளையாதலால் - எல்லோரும் நடமாடிக் கொண்டு தத்தம் அலுவல்களிலிருந்தனர். அவர்கள் நடமாட்டத்தால் சந்தடியிருந்தாலும், வாசுவுக்கு வீட்டிலே ஒரு பயங்கர அமைதி நிலவியிருந்ததுபோலவே தோன்றியது. அதிலே மரண தேவதை ஒளிந்து நெளிந்து திரிவதுபோலவும் ஒரு திகில். ஒடுங்கிக் கொண்டிருந்தது அவனுடைய உள்ளம்.

சற்று நேரத்திற்கு முன்பு வந்து போன பெரிய டாக்டர் சாடையாகச் சொல்லிப் போனதை வாசு மட்டுமே கேட்டான். அதற்கு முன் குற்றுயிராக இருந்த அவனுடைய நம்பிக்கை - ஒரு நைப்பாசை - அதற்கப்புறம் போயே போய்விட்டது.

"போய்விட்டாளா? தூக்கிப் போய்விட்டதா மரணம்?" என்று அறிகிற தோரணையிலே, ஒரு தயக்கத்துடன், தவிப்புடன் எட்டிப் பார்த்தான் அறைக்குள்.

"வாசு!" என்று பலஹீனமான குரலிலே அம்மாவின் அழைப்பு வந்தது. ஓடினான் உள்ளே.

"அப்பா வாசு! எனக்குப் பிராயச்சித்தம் பண்ணிக்கொண்ண வேண்டுமென்று இருக்கிறதப்பா! ஏற்பாடு பண்ணுகிறாயா?" என்று கேட்டாள் அம்மா.

‘என்ன, பிராயச்சித்தமா? எதற்கம்மா உனக்கு! நீ புண்ணியமூர்த்தியல்லவோ?’ என்றது வாசுவின் அந்தரங்கம். ஆனால் நா எழவில்லை, அவனுடைய முகம் வீக்கங்கொண்டது, உயிரைப் பறிகொடுக்கவிருக்கும் நோயாளி போல.

"அப்பா, நீ வீணாகக் கவலைப்படக்கூடாது. எனக்கு என்னமோ நான் போய்விடுவேன்னுதான் தோன்றது - அதனாலே பிராயச்சித்தம் பண்ணிண்டுடலாம்னு இருக்கு! நாம் செய்திருக்கிற தப்புகளுக்கெல்லாம் கடைசிக் காலத்துலே மன்னிப்பு கேட்டுண்டு போகிறதுக்கும் பாக்கியம் வேணுமப்பா!... உனக்குத் தெரியாதோ... பிராமணர்களை வைத்துப் பிராயச்சித்தம்னு பண்ணிக்குவா.... எனக்கு என்றைக்குமே ஒரு குறைவுமில்லை - இப்போ இந்தக் குறையும் இல்லாமல் பகவான் இதுக்கு அவகாசம் ஏற்படுத்தியிருக்கார் . . . ."

காவேரியம்மாள் பேச்சை முடிக்கவில்லை "ஐயோ, அம்மா, உனக்கும் தோன்றிவிட்டதா?" என்றான் வாசு. மறுபேச்சுப் பேசாவிட்டாலும் ஒரு பார்வை மூலம் அன்னைக்குக் கூறிவிட்டான், அவளுடைய கடைசி விருப்பத்தை நிறைவேற்றுவதாக! வெளியே வந்துவிட்டான், நெஞ்சு நடுங்க.

காவேரியம்மாள் பிள்ளையின் மன வேதனையை அவனுடைய கருகிய முகத்தினூடே உணர்ந்துதானிருந்தாள்.

"பிராயச்சித்தம் நடக்கப் போகிறது!"

எல்லோருக்கும் ஒரு பதற்றம், ஆனால் ஒரு தெய்வீக உணர்ச்சியையும் ஒவ்வொருவரும் உணர்ந்தார்கள்.

"தைரியமாகச் சாவை எதிர்பார்க்கிறது ஒரு உயிர்!" என்னும் எண்ணம் பக்தியைப் புகுத்தாவிட்டால், பின் வேறு எந்த எண்ணம்தான் பக்தியைப் புகட்டவல்லது?

பிராயச்சித்தம் ஒழுங்காக நடந்தேறிவிட்டது. ஆனால்.... ஆனால்....

## 2

அப்புறம் நிகழுமென்று எல்லோரும் எதிர்பார்த்தது நிகழவில்லை. முன்னிலவு போய்விட்டது. ஆனால் பின்னிருள் வரவில்லை, அடுத்து. தன்னை எதிர்கொண்டழைக்கக் காத்திருந்த காவேரியம்மாளைக் கண்டு காலன் கைகூப்பினன் போலும்! பாசக் கயிற்றினை வீச அஞ்சினன் போலும்! ஆசைக்குப் பாத்திரமான ஏனையோரையும், விட்டுச் செல்லவேண்டிய சமயத்திலும், காவேரியம்மாளின் மனோபலத்தின் உயர்வு கண்டு, மறலியே அரண்டனன் போலும்!

கடமையை எண்ணி மறுநாள் பார்க்க வந்துவிட்டு டாக்டர் "பயமில்லை!" என்று காவேரியம்மாளைப் பற்றிச் சொல்லிப் போனார். ஆனால் மற்றவர்கள் அப்படி நினைக்கவில்லை. படுத்திருப்பவரின் மனம் சொல்வதுதான் டாக்டரின் வாக்கைவிட உண்மையாயிருக்கக் கூடியது என்று எண்ணினார்கள். அணையுமுன் சுடர்விட்டு விளக்கு எரிவதைப்போல, இறப்பவர் நிலைமையும் சிறிது நல்ல மாறுதல் காட்டுவது வழக்கம்தான் என்று தான் சொல்லிக் கொண்டார்கள். டாக்டரின் பேச்சையும், மற்றவர் நிச்சயத்தையும் கண்ட வாசு, ஒரு தினுசாக மிரண்டான். சாவைப் பற்றி இவ்வளவெல்லாம் பேச்சு இருக்கக் கூடும் என்று அவனுக்குத் தெரியாது.

ஒரு நாள்... இரண்டு நாள்... மூன்று நாள்.... டாக்டர் வந்துபோனார்.

"அபாயமில்லை! குணம்தான்!" என்றார். காவேரியம்மாளும் அப்படித்தான் காணப்பட்டாள்.

"சுவாமி! நின் அருளே அருள்!" என்று மனதாரத் துதி செய்தான் வாசு.

"அபாயம் அகன்றது!" என்று உறுதியாக வந்த வாக்கு அவன் செவியிலே இன்பம் பாய்ச்சியது. ஒரு ஆறுதலுடன் வாசலுக்கு வந்தான் வாசு.

யார் யாரோ..... வீட்டிலும், அக்கம் பக்கத்திலும் குசுமுசுவென்று பேசிக் கொண்டிருந்தார்கள். ‘என்னமோ ஏதோ!’ என்று நினைப்பவன் போல வாசலில் தனியாக தன் போக்கிலே உட்கார்ந்து கொண்டிருந்தான் வாசு. ஆனால் அவன் மனம் பிறர் மனதும் தன்னைப் போலவே குதூகலங்கொண்டிருப்பதாகத்தான் நினைத்தது. பக்கத்து வீட்டு மாமா எட்டிப் பார்த்தார் திண்ணையிலிருந்து.

"மாமா... அம்மாவுக்கு குணமாயிடும்னு டாக்டர் சொல்றார், மாமா.... இதுக்குதானே தெய்வச் செயல்னு நினைக்கும்படியாய் இருக்கு - சாவின் வாயிலே எட்டிப் பார்த்துவிட்டு மீளறது" என்று கூறி நிறுத்தினான் வாசு.

ஒரு வினாடி ஏதோ மாதிரி அவர் இருந்ததாகப்பட்டது வாசுவுக்கு. இவன் பேச்சை நிறுத்தியதால் ஏதோ சொல்லணும் என்று எண்ணியவர் போல அவர் பேசினார்.

"ஆமாம் அப்பா... தெய்வச் செயல்தான்... ஆனால் அதைவிட 'விதி'ன்னு சொல்வது ரொம்பப் பொருந்தும்!" என்றார்.

'அம்மாவைப் பற்றி சொன்னதும் ஏன் அவர் முகம் ஒருவித உவகையுணர்ச்சியும் காட்டவில்லை?' என்று ஏற்கெனவே சற்று சந்தேகப்பட்ட வாசு, " என்ன மாமா, ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்!" என்று பதறியது போல வினவினான். அவர் ஒரு மாதிரி குரலைத் தாழ்த்திக் கொண்டார்.

"அப்பா, உனக்குத் தெரியாது விஷயம்! பிராயச்சித்தம் செய்து கொண்டவர்கள், அப்புறம் பிழைப்பது நல்லதில்லைன்னு சொல்வார்கள்! அவர்கள் பிழைத்து எழுந்துவிட்டால், அவர்களுக்குப் பதில் வேறுயாரையாவது வீட்டிலே அடித்துவிடும் என்பார்கள். அதுதான் சொன்னேன் - விதி யாரை எப்போது எப்படி அழைக்கிறதோ?" இழுத்தாற்போல பேசிமுடித்தார் அவர்.

'அப்படியா?' என்று மலைத்தான் ஒருகணம், வாசு, பிறகு 'சை! இது அசட்டு நம்பிக்கை!' என்று ஒரு சமாதானம் தேடிக்கொண்டு தெளிவு பெற முயன்றான். நிழலில் வளரும் செடிபோல உறுதியற்றிருந்தது அவனுடைய சமாதானம்.

அம்மாவின் மெல்லிய அழைப்புக் கேட்டது. ஓடினான் உள்ளே. குனிந்தான் அன்னையின் அருகில்.

"என்னடாப்பா, வாசு! எனக்கு குணமாகிக்கொண்டு வருகிறதுன்னா டாக்டர் சொன்னார்?" என்று வாசுவை நோக்கிக் கவலையுடன் கேட்டுவிட்டு, பக்கத்தகத்து மாமா சொன்னதையே அச்சத்துடன் சொன்னாள் காவேரியம்மாள். சாகுமுன் பிராயச்சித்தம் செய்து கொள்வதைப் பற்றி அறிந்திருந்த அவளுக்கு, அதையொட்டிய இந்த விஷயம் தெரியாமற் போகுமா?

"அதெல்லாம் நினைக்காதேம்மா! அசட்டுத்தனம்! உனக்கு குணமாகிறதேன்று சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கிறேன்! நீ குழப்பிக்கொள்ளாதே மனசை!" என்று கண்டிப்புத் தொனிக்க ஆறுதலே கூறினான் வாசு.

"என்னவோப்பா! தெய்வம் சோதிக்கிறது!" என்றாள் அன்னை.

"என்னை சோதனை பண்ணாமல் விட்டதே!" என்று சொல்லிவிட்டு எழுந்து வந்தான் வாசு. தான் போகாததைக் குறித்து பிள்ளை குதூகப்படுவதை, சோர்வுடன்தான் உணர்ந்தாள் காவேரியம்மாள்.

## 3

வாசுவைச் சோதனைக்கு அப்போதுதான் உள்ளாக்கியிருந்தார் கடவுள் என்பதை நிரூபிப்பதேபோல நாலு நாள் கழித்து மாறுதல் ஒன்று நிகழ்ந்தது! காவேரியம்மாள் குணங்காட்டினாள்; என்ன மாயமோ, வாசுவின் மனைவி மீனாக்ஷிக்குச் சுரம் கண்டது.

"அதுதான் காரணம்!" என்று பேசத் தொடங்கினார்கள் பிறர். மீனா அப்படி எண்ணினாளோ என்னமோ, ஆனால் வாசுவுக்கு, 'அப்படித்தானோ நடக்கும்?' என்று யோசனை வந்துவிட்டது. மற்றவர்கள் குசுமுசுப்பைக் கேட்டுக் கணவன் முகம் விகாரம் அடைவதைக் கவனித்தாள் மீனாக்ஷி.

"அதெல்லாம் ஒன்றுமில்லை! அப்படி நடக்காது, கவலைப்படாதீங்கோ! நடுவிலே கொஞ்சநாள் உடம்புக்குக் கொஞ்சம் சரியில்லாமலேயே அதிகம் நடமாடிவிட்டேனோல்லியோ..... அதுதான் கொஞ்சம் ஒத்துக்கல்லை! எல்லாம் குணமாகிவிடும் எனக்கு" என்று தைரியம் சொன்னாள் கணவனுக்கு.

'அப்படியுமிருக்கலாம்! சுவாமி! இவளையும் காப்பாற்றிவிடு!' என்று வேண்டிக் கொண்டான் வாசு.

ஆனால் காவேரியம்மாள் மட்டும் அரற்றத் தொடங்கிவிட்டாள்.

"நான் பிராயச்சித்தம் செய்துண்டது பிசகாப் போயிடுத்தப்பா வாசு! என்னமோ போயிடுவேன்னுபட்டது மனசுக்கு. பண்ணிக்கணும்னு தோணித்து. இப்படியாகும்னு நினைக்கல்லையே!" என்று அங்கலாய்த்தாள்.

‘ஏன்தான் எனக்கு இந்த விபரீத ஆசை எழணுமோ!’ என்று வருந்தினாள்.

"வயதாவனள் நான் போகிறது நியாயம்! எனக்கும் நல்லது! இப்பொ சிறிசு அவளுக்கு மோசம் வந்திடும் போலிருக்கே என்னாலே!" என்று பொருமினாள்.

"அவள் போயிட்டால், அப்புறம் சாகிறமட்டும் எனக்கும் வேதனை தாண்டாப்பா மிஞ்சும்? ‘இப்பொ போனவள் அப்பவே போயிருக்கக் கூடாதா? சின்னவளை முழுங்கிவிட்டு போனாள்!’ என்ற பேச்சும் நான் போனப்புறம் நிலைச்சுடுமேடாப்பா!" என்று கலங்கினாள்.

"அம்மா! அலட்டிக் கொள்ளாதேயேன்! எப்படியெல்லாம் நடக்கணும்னு கடவுள் ஏற்பாடோ அப்படி நடக்குமே ஒழிய, உன் தப்பாவது, என் தப்பாவது? அதெல்லாம் சும்மா!" என்று அம்மாவைத் தேற்றினான் வாசு.

ஆனால் அவன் மனம்பட்ட வேதனை யமவேதனை. முன்னிலவு போய்விட்டது; பின்னிருள் - அடுத்துவர வேண்டியது - இந்த விதமாக வந்திருப்பதை உணர்ந்தான். ஏதோ ஒருவிதமாக இந்த இருள் போய் பகல் வரலாம். ஆனால் பகல் எப்படியிருக்கும்? நேர்மாறாகத்தான்?

வாசுவின் உள்ளம் கடகடத்தது.

மனைவியின் உடம்பு அதிகமாவதைப் பார்த்து, "மீனு போய்விடுவாள் போலிருக்கே!" என்னும் திகில் ஒரு புறம்.

‘அப்படி நடந்துவிட்டால், அப்புறம் அம்மாவுக்கு ஆயுசுவரை நிம்மதி ஏது?’ என்ற நினைப்பு ஒருபுறம். வேதனை அவனைத் தூண்டிலில் போட்டுக் கொண்டது; கொழுவிக் கொழுவி எடுத்தது.

அன்றிரவு மீனுவுக்கு 'இப்படியும் அப்படியுமாக' இருந்தது, அவள் பக்கலில் இருந்தான் வாசு. அம்மா கூப்பிட்ட மாதிரி இருந்தது; ஓடொடி வந்தான் அன்னை அருகில்.

"அப்பா வாசு! நான் போகமாட்டேனா? எனக்குப் பொறுக்கவேயில்லையே இந்த வேதனை. அவளுக்கும் உனக்கும் அநியாயம் பண்ணிவிட்டேனே! உனக்கு அப்பா போய்ட்டார் சிறுவயசிலே. கண்ணு ரமணிக்கு அம்மாவையே இல்லாமல் பண்ணிடுவேன் போலிருக்கே! சுவாமி, பகவானே! என்னை அழைச்சிண்டு போயேன்!" என்று பிதற்றிக் கொண்டிருந்தாள் அம்மா.

"அம்மா, அம்மா! ஏம்மா இப்படி கலவரப்படுகிறே!" என்று கூறிக்கொண்டே, மயக்க நிலையிலே காணப்பட்ட அன்னையை மெதுவாக அசைத்தான் புதல்வன்.

“ராமா, ராமசந்திரா . . . ரகுநந்தனா . . . ” என முணுமுணுத்தவாறே ஒரு நிமிஷம் இருந்தாள் காவேரியம்மாள். பளிச்சென்று கண்களைத் திறந்து, சுய உணர்வுடன் புதல்வனைப் பார்த்தாள்.

"வாசு... நானே போறேண்டாப்பா.. நீயும் அவளும் குழந்தை குஞ்சுகளோட தீர்க்காயுசாயிருக்கணும்!"

இந்த இறுதிப் பேச்சுடன் மெல்ல ராம ஜபம் செய்தவாறே பூத உடலை நித்து வானுலகு சென்றாள் காவேரியம்மாள்.

கண்ணுக்கெதிரே காணப்பட்ட புதல்வன், மனக் கண்ணெதிரே தென்பட்ட நாட்டுப் பெண், அந்தரங்கத்திலே தோன்றிய இறைவன் ஜோதி: மூன்றுபேரும் சாந்தி கூற, காந்திபோலப் பிரிந்தாள், வாசுவின் தாய்.

‘என் மனச்சாந்தியை விரும்புபவன் நீ என்பது உண்மையாயின், என் சாவுக்கு வருந்தாதே! தென்பாயிரு!’ என்று சொல்லாமல் செயலிலேயே அறிவுறுத்திவிட்டு, பிராயச்சித்தத்தின் மூலம் பெரியதொரு விந்தை புரிந்துவிட்டு, போகும்பொழுதும் தன் மனச்சாந்திக்கு அடிகோலிச் சென்ற அன்னைதான் வாசுவுக்கு தெய்வம். ஆனால் ‘தெய்வத்திற்கு மேல்’ என்பது மீனாவின் எண்ணம்!

**********

(பாரிஜாதம், ஏப்ரல், 1949)